வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**MCOP.No. 172 / 2023**

வழக்கு சாட்சி **PW 2**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரோசலீன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : | கணவர் பெயர் | : செல்வராஜ் |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 26.03.2025 |

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் விபத்து சம்பத்தை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். விபத்து நடைபெற்றது ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்திற்குள் என்றால் சரிதான். அரசு பேருந்து நிலையத்தில் உள்ளே வந்து தெற்கு கடைசி அடைந்து வடக்கு பக்கம் திரும்பும் பொழுது தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். பேருந்தின் இடது முன்பகுதி தான் காயம்பட்ட நபரின் மீது மோதியது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் எனது தந்தை என்றால் சரிதான். எனது தந்தை ஒரு மாற்றுதிறனாளி என்றால் சரிதான். அவருக்கு கண்பார்வை கிடையாது என்றால் சரிதான். எனது தந்தை தான் கவனக்குறைவாக பேருந்து வருவது தெரியாமல் அவரே பேருந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. பேருந்தை ஓட்டி வந்தவர் கவனமாகவும் சாலைவிதிகளை பின்பற்றியும் தான் ஓட்டி வந்தார் என்றும் விபத்திற்கு அரசு பேருந்து ஓட்டுநர் காரணம் அல்ல என்றால்

சரியல்ல. விபத்திற்கு பின்பு எனது தந்தை ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை மற்றும் மதுரை அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்றார் என்றால் ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனை மற்றும் ஒட்டன்சத்திரம், மதுரை அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றார். விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் அவருக்கு பூரணமாக குணமாகிவிட்டது என்றும் தற்சமயம் அவருக்கு விபத்து காயங்களால் காயம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.27 17:26:31 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்